உ

சிவமயம்

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்
# பதின்மூன்றாவது ஆண்டு
# அறிக்கை.



வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உண்ணின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள்.

யுவ-ஆண்டு சித்திரைத்திங்கள் ௧௫-ம் நாள்.

1935.

# ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியவர்கள்.

---:0:---

| | |
|---|---|
| முதலாவதாண்டு | பிர்மஸ்ரீ எ. வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள், கண்டனூர் |
| இரண்டாவதாண்டு | திருவாளர் தெ. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள், கண்டனூர். |
| மூன்றாவதாண்டு | குமரன் ஆசிரியர் திருவாளர் சொ. முருகப்பா அவர்கள், காரைக்குடி |
| நான்காவதாண்டு | திருவாளர் பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியாரவர்கள், காக்திநகர். |
| ஐந்தாவதாண்டு | திருவாளர் சா. லெ. செட்டியப்பச் செட்டியார் அவர்கள் காரைக்குடி. |
| ஆறாவதாண்டு | தேவகோட்டை டிஸ்டிரிக்ட் முன்சிப் டி. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள் B.A.B.L. |
| ஏழாவதாண்டு | புதுக்கோட்டை மாஜி கல்வி இலாக்காத் தலைவர் B. V. சங்கரகாமேஸ்வர ஐயர் அவர்கள் B. A. |
| எட்டாவதாண்டு | தேசபக்தர் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள், M. A. B. L. திருநெல்வேலி |
| ஒன்பதாவதாண்டு | அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B.A.B.L. திருநெல்வேலி. |
| பத்தாவதாண்டு | T. M. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் M.A.B L., M.L.C. திருச்சி |
| பதினோராவதாண்டு | உயர்தர நீதிமன்றத்து வழக்கறிஞர் திரு. S. சோமசுந்தர பாரதி அவர்கள் M. A. B. L., மதுரை. |
| பன்னிரண்டாவதாண்டு | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A.B.L. கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், தஞ்சை |



ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் இரண்டாவது ஆண்டு ஆசிரியர்களும்
மாணவ மாணவிகளும்.




"வசீகர சுந்தரி" நாடகத்தில் நடித்த
ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்கள்

உ

சிவமயம்.

# புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்

# பதின்மூன்றாவது ஆண்டு அறிக்கை.

அன்பிற் சிறந்த அவைத்தலைவரவர்களே!
சகோதர சகோதரிகளே!

இச் சங்கம் துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் ஒன்பதாம் நாள் (24—7—1922) நிறுவப்பெற்று நன்கு நடைபெற்று வருகின்றது. இளைஞர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, கதர் அபிவிருத்தி ஜீவகாருண்யம் ஆகியவற்றின் வளர்ச்சிகருதி தொண்டாற்றலே இதன் முக்கிய நோக்கமாகும்.

*தலைவர்*
திருவாளர் வீர. பழ. வினைதீர்த்தான்

*காரியதரிசி*
திருவாளர் சித. இராமசாமி

---

## அங்கத்தினர்கள்.

1 திருவாளர் சா. சிதம்பரம் செட்டியார்.
2 „ பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார்.
3 „ சித. இராமசாமி செட்டியார்.
4 „ வடு. மு. ராம. பழ. இராமநாதன் செட்டியார்.

5 திருவாளர் வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார்.
6 ,, வீர. பழனியப்ப செட்டியார் (நத்தலின்)
7 ,, ராம. சுப. அடைக்கப்ப செட்டியார்.
8 ,, வீர. சோலையப்ப செட்டியார் (டேரியா)
9 ,, வீர. பழ. விருத்தகிரி செட்டியார் (சுங்கட்டா)
10 ,, மெ. கரு. அண்ணாமலை செட்டியார் (பினங்கு)
11 ,, அ. நாகப்ப செட்டியார் (பாசியன்)
12 ,, அ மு. சித. முத்தையா செட்டியார்.
13 ,, அ. சு. பழ. சு. சோம. இராமநாதன் செட்டியார் (மின்லா)
14 ,, சா. காசிச் செட்டியார்.
15 ,, மு. மு. அழ. அழகப்ப செட்டியார்.
16 ,, பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார்.
17 ,, பெரி. வீர. ராம. பெரியண்ணன் செட்டியார்.
18 ,, அரு. ப. மு வீர. அண்ணாமலை செட்டியார்.
19 ,, ள. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார்.
20 ,, வீர. இராமநாதன் செட்டியார் (இரங்கூன்)
21 ,, கா குழ. ராம. வீர. இராமசாமி செட்டியார்
22 ,, லெ. இராமநாதன் செட்டியார்.
23 ,, பெ. க. வீர நாராயணன் செட்டியார் (பீங்கசா)
24 ,, வீர. அழ. அழகப்ப செட்டியார்.
25 ,, ராம. வீர. இராமசாமி செட்டியார்.
26 ,, அ அழ. அண்ணாமலை செட்டியார்.
27 ,, ப. செ. பழ. சே. பழனியப்ப செட்டியார்.
28 ,, ப. வடி. பெரி. ராம. கா. அருணாசலம் செட்டியார்.
29 ,, மெ நடேசன் செட்டியார்.
30 ,, சோம. தியாகராஜன் செட்டியார்.

31 திருவாளர் அழ. குப சுப. வீரப்ப செட்டியார் (இரங்கூன்)

32 ,, ப பெ. அரு. ராம. பழ. அருணாசலம் செட்டியார்.

33 ,, மு. மு. இராமசாமி செட்டியார்

34 ,, எ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார்

35 ,, உ. ராம. பெ. ராம. காசிச் செட்டியார்

36 ,, சித. ராம. குமரப்ப செட்டியார்

37 ,, எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார்.

38 ,, சு. கதி. சுப்பையா செட்டியார்.

39 ,, மெ. சிதம்பரம் செட்டியார்.

40 ,, அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார்.

41 ,, கு. செ. மு. பெரி காசிச்செட்டியார்.

42 ,, பெ. ப. வி. வீர. பழ. வீரப்ப செட்டியார்.

43 ,, மெ. வீரப்ப செட்டியார்.

44 ,, அழ. சா. மு. ராம. சாத்தப்ப செட்டியார்.

45 ,, மு. உ. வீரப்ப செட்டியார்.

46 ,, கு. ராம. வீரப்ப செட்டியார்

47 ,, அரு. வீர. ராம. வீரப்ப செட்டியார்.

48 ,, ப. வடு. வி. நா வீரப்ப செட்டியார்.

49 ,, அ. [illegible] செட்டியார் ([illegible]

## கௌரவ அங்கத்தினர்கள்.

திருவாளர் எ. பெரி. பெரியணன் செட்டியார்.

,, ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார்.

,, கு. வீர. பழ, அ. பழனியப்ப செட்டியார்.

,, ப. வடு, பெரி. ராம. காசி செட்டியார்.

,, பெரி. அரு. வீரப்ப செட்டியார் (சயிலா)

,, அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார்.

,, S. P. வீரப்பா அவர்கள்.

,, எ. மு முத்தப்ப செட்டியார், பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டு.

,, A. K. கருப்பன் செட்டியார், (தனவணிகன் ஆசிரியர் ரெங்கூன்)

,, சொ. முருகப்பா அவர்கள் (குமரன் ஆசிரியர் காரைக்குடி)

,, ராய. சொக்கலிங்கன் அவர்கள் (ஊழியன் ஆசிரியர் சென்னை)

,, A. S. சர்மா அவர்கள் (செட்டிநாடு ஆசிரியர் காரைக்குடி)

,, ஆ. வி. லெ. அருணாசலம் செட்டியார் (காரைக்குடி)

---

## அபிமானிகள்

திருவாளர் பெரி. அரு. நாகப்ப செட்டியார்.

,, பழ சு. பழ. பழனியப்ப செட்டியார்.

,, பெ. ப. வி. வீர. பழ. பழனியப்ப செட்டியார் (பினங்கு).

,, மு. வினைதீர்த்தான் செட்டியார் (சயிலா)

,, அரு. உ. வீர. அழகப்ப செட்டியார் (மீன்லா)

,, வீர. கும. குமரப்ப செட்டியார்.

,, அ. ப. சி. மு. சின்னையா செட்டியார்.

,, பழ மு. பழ. வீர. முருகப்ப செட்டியார்.

,, சோம சுப்பையா செட்டியார்.

,, சுப. நாராயணன் செட்டியார்.

,, மு. சோமசுந்தரம் செட்டியார்.

,, சித. காசிச்செட்டியார்.

,, அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்.

திருவாளர் சி. வீர. சோம. வீரப்ப செட்டியார்.
,, சி. பழ. வீர. லெ. வீரப்ப செட்டியார்.
,, சுப. சித. இலக்குமணன் செட்டியார்.

---

## மாதக் கூட்டங்கள்

பவ-ஆண்டு வைகாசித் திங்கள் முதல் பங்குனித் திங்கள் வரை பலஅறிஞர்கள் தலைமையில் அன்பர்கள் பலர் உபந்நியாசங்கள் புரிய, மாதக் கூட்டங்கள் பதினொன்று நடைபெற்றன.

## பன்னிரண்டாவது ஆண்டு விழா

பவ-ஆண்டு சித்திரைத் திங்கள் உ௰கூம் நாள் காலை மாலை இருவேளைகளிலும், சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழாவும், வித்தியாசாலையின் இரண்டாவதுஆண்டு விழாவும், தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவரும் அண்ணமலை சர்வகலாசாலை செனெட் சபை மெம்பரும் நீதிமன்றத்து வழக்கறிஞரும், செந்தமிழ் புரவலருமாகிய உயர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A., BL. அவர்கள் தலைமையில் ஷண்முகநாதபுரம் திரு. ராம. நாகப்பசெட்டியாரவர்கள் 'தனவணிக சமுகமும் தற்கால நிலைமையும்" என்னும் பொருள்பற்றியும், சாத்தூர் வழக்கறிஞர் திரு. T. S. கந்தசுவாமி முதலியார் B.A., அவர்கள் "வீரச்சுவை" என்னும் பொருள் பற்றியும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவமாணவிகளால் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் முதலியவைகளும் நடைபெற்றன.

## நாடகம்

சிவகெங்கை திரு. T. வெள்ளச்சாமி பிள்ளை அவர்களாலியற்றப் பெற்ற "வச்கர சுந்தரி" என்னும் நாவலை சங்கத்தின் கௌரவ அங்கத்தினரும் தனவைசிய சங்கீதத் திலகமுமாகிய திரு. S. P. வீரப்பா அவர்களால் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை

மாணவர்களுக்கு நாடகரூபமாய்ப் பயிற்றுவிக்கப்பெற்று ஆண்டு விழாவன்றையத்தினம் இரவு 9-30 மணிக்கு பக்க வாத்தியங்களுடன் நடித்துக் காண்பிக்கப் பெற்றது. பயிற்றுவித்த ஆசிரியர் திரு. S. P. வீரப்பா அவர்களுக்கும் நடித்த மாணவர்களுக்கும் வித்தியாசாலையின் சார்பாக பதக்கங்கள் பரிசாக அளிக்கப் பெற்றன.

## தேநீர் விருந்து

பவ-ஆண்டு சித்திரைத் திங்கள் ௨௰௪ம் நாள் மாலை 4-மணிக்கு ஆண்டு விழாவில் கலந்து தொண்டாற்றிய அன்பர்களுக்கும், சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், அபிமானிகளுக்கும், ஸ்ரீசரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் சிற்றுண்டி தேநீர் அளிக்கப்பெற்றது. பின்னர் திரு S. இராமநாதய்யர் மிருதங்கத்துடன் திரு. S. கரும்புவய்யங்காரவர்கள் இனிய வாய்ப்பாட்டுப்பாட வந்தன வாழ்த்துடன் இனிது நிறைவெய்தியது.

## கம்ப இராமாயணம்

பவ-ஆண்டு சித்திரைத் திங்கள் ௨௰௫ம் நாள் மாலை 5 மணிக்கு மேல் "கம்பநாடர்" ஆசிரியர் திரு. மோ. வெ. கோவிந்தராஜய்யங்காரவர்களால் "சீதா கல்யாணம்" என்னும் பொருள் பற்றி சுமார் மூன்று மணி நேரம் பல மேற்கோள்களுடன் பிரசங்கம் செய்யப்பெற்றதும் வந்தன வாழ்த்துடன் இனிது நிறைவெய்தியது.

## ஜீவகாருண்யப் பிரசாரம்

சங்கத்தின் சார்பில் சாக்கை ஸ்ரீ உய்யவந்த அம்மன் உற்சவத்தில் நடைபெறும் பலிப்பொங்கலை நிறுத்துவான்வேண்டி, பவ-ஆண்டு ஆனித் திங்கள் முதல்நாளில் சங்கத்தின் அங்கத்தினர்களாலும் வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்களாலும் நேருச்சதுக்கத்தில் பிரசங்கங்கள் நடைபெற்றுத் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பெற்றன.

## அநுதாபக் கூட்டம்

பவ-ஆண்டு வைகாசித் திங்கள் உ௰௩ம்நாள் மாலே 5மணிக்கு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலே ஆரம்ப ஆசிரியை திரு. K. V. பத்மாவதி அம்மாள் அவர்கள் (4—5—34)ல் தேகவியோகமானது குறித்து காரைக்குடி திரு. அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் பல அன்பர்கள் கூடயிருந்து அநுதாபத்தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பெற்றது.

## காந்தி ஜெயந்தி விழா

பவ-ஆண்டு புரட்டாசித் திங்கள் ௰௬ம் நாள் காரைக்குடி "செட்டி நாடு" ஆசிரியர் திரு. A. S. சர்மா அவர்கள் தலைமையில் திரு. சோம. தியாயகராஜன் அவர்களும் திரு. வீர. பழ. வினைதீர்த்தான் அவர்களும் திரு. அழ. மு. மு. அழகப்பன் அவர்களும் திரு. சுப. நாராயணன் அவர்களும் வித்தியாசாலே தலைமை ஆசிரியர் திரு. K. சுப்ரமண்யம் அவர்களும் வித்தியா சாலே மாணவ மாணவிகளும் மகாத்மா காந்தியடிகளைக் குறித்தும் நமது நாட்டைக் குறித்தும் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு காந்தியடிகளைப் பாராட்டி அவர்கள் நீடுழிகாலம் நீடகாத்திரத்தோடு வாழ வேண்டுமென்றும் அதற்குக்கடவுள் அனுக்ரஹம் புரியுமாறும் பிரார்த்தனைத்தீர்மானம் ஒன்று சபையோர்களின் கரகோஷத்தினிடையில் நிறைவேற்றப்பெற்று தலைவரவர்கள் மூலம் மகாத்மாஜிக்கு தீர்மானத்தை லிகிதவாயிலாக அனுப்பப் பெற்றதும் வந்தன வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது (ஷெ விழா திரு. சா. சிதம்பரம் செட்டியார்; திரு சித. இராமசாமி செட்டியார் இவர்களின் பொருளுதவியால் நடைபெற்றது)

## கலைமகள் விழா

பவ-ஆண்டு புரட்டாசித் திங்கள் ௯-ம் நாள் கலைமகள் விழா கொண்டாடப்பெற்றது. (ஷ விழா திரு. வீர. பழ. வினை தீர்த்தான் செட்டியார், திரு. வடு. மு. ராம. பழ ராமநாதன் செட்டியார், திரு. எ. ராம. வீர. பழ முத்துவள்ளியப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியால் நடத்தப்பெற்றது)

## வாசக சாலை

இச் சங்கத்தின் சார்பில் வாசகசாலை ஒன்று நடைபெற்று வருகிறது. அதில் 282 புத்தகங்கள் இருக்கின்றன. பல பத்திரிக்கைகள் வரவழைக்கப்படுகின்றன பலஅன்பர்கள் வந்துவாசித்து வருகிறார்கள்.

## நன்கொடை

திரு. சு பெ. சு. சோம. சுப்பையா செட்டியார் திருமணத்தில் ரூ.5ம், திரு. பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார் திருமணத்தில் ரூ.11ம், அரு. சோம. அருணாசலம் செட்டியார் திருமணத்தில் ரூ.5ம், திரு. சி. வீர. சோம. வீரப்ப செட்டியார் திருமணத்தில் ரூ. 5ம், திரு. மெ. வீர. மெ. நடேசன் செட்டியார் திருமணத்தில் ரூ.11ம், திரு. உ. பெரி. உ. பெரிய கருப்பன் செட்டியார் ஷஷ்டிஅப்த பூர்த்தி சாந்திக்கல்யாணத்தில் ரூ.11ம், திரு. மெ வீர. மகன் மெய்யப்பன் காப்புக்கட்டுப்புதுமையில் ரூ.5ம், திரு. கு. செ. மு. பெரி. கா. மகள் சிவகாமி காப்புக்கட்டுப் புதுமையில் ரூ.5ம், திரு. அ. மு. சித. மு. மகன் சிதம்பரம் காப்புக் கட்டுப்புதுமையில் ரூ.11ம், நன்கொடையாக உதவியுள்ளார்கள்.

## பத்திரிக்கைக்கு நன்கொடை உதவியவர்கள்

"குமரன்" வாரப்பத்திரிக்கை திரு. சா. சிதம்பரம் செட்டியாராலும், "ஊழியன்" வாரப்பத்திரிக்கை திரு. வீர. பழனியப்ப செட்டியாராலும், "கலா நிலையம்" வாரப்பத்திரிக்கை

திரு .வீர. அழகப்ப செட்டியாராலும், "சுதேசமித்திரன்" வாரப் பத்திரிக்கை திரு. அ. நாகப்ப செட்டியார், திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார் ஆகியவர்களாலும், "தினமணி" தினசரிப் பத்திரிக்கை திரு. மெ. நடேசன் செட்டியாராலும், நன்கொடையாக உதவப்பெற்று வருகின்றன. "செட்டிநாடு" வாரப்பத்திரிக்கையும் ஸ்டாம்புக்கட்டணம் மாத்திரம் பெற்றுக்கொண்டு அனுப்பி வருகிறார்கள்.

புத்தகங்கள் நன்கோடை தந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| கோட்டையூர் திரு. வெ. நா. இலக்குமணன் செட்டியார் | புத்தகங்கள் | 2 |
| பள்ளத்தூர் திரு. கெ. பெ. ராம. இராமசாமி செட்டியார் | புத்தகங்கள் | 15 |
| திரு. வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் | புத்தகங்கள் | 3 |
| திரு. சா. சிதம்பரம் செட்டியார் | புத்தகம் | 1 |
| ஒருஅன்பர் அளித்த | புத்தகங்கள் | 21 |

சிவமயம்.

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின்
# மூன்றாவது ஆண்டு அறிக்கை.

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் இச்சங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகிய கல்வியை வளர்க்கும் பொருட்டு "ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை" என்ற பெயருடன் ஆங்கீரஸ ஆண்டு தைத்திங்கள் ௩-ம் நாள் (16—1—33) ஓர் கல்லூரி நிறுவப்பெற்று நன்கு நடைபெற்று வருகிறது. இவ் வித்தியாசாலையின் நோக்கங்கள் மாணவ மாணவிகளுக்குத் தமிழ்க் கல்வி, சங்கீதம், இலக்கணம், இலக்கியம், கணக்கு, சித்திரம், கைத்தொழில், தேகாப்யாசம், சுகாதாரம், ஆங்கிலம், உலகஅறிவு, தேசியம், தேசசரித்திரம், இயற்கைப் பொருட்பாடம், சன்மார்க்க போதனை, ஆகியவைகளைக் கற்பித்தல்.

## ஆசிரியர், மாணவர், பொருப்பாளர்.

இவ்வித்தியாசாலையின் இரண்டாவதாண்டு நிறைவில் மூன்று ஆசிரியர்களும், இரண்டு ஆசிரியைகளும், 40 மாணவர்களும் 38-மாணவிகளும், இருந்தனர். தற்சமயம் 5 ஆசிரியர்களும், 1 ஆசிரியையும், 40 மாணவர்களும், 39 மாணவிகளும் இருக்கின்றனர். ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கப்பெற்று கல்வி போதிக்கப்பெற்று வருவதுடன் திருவாளர் பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியாரவர்களை காரியதரிசியாகவும், நியமிக்கப்பெற்று, நன்கு நடைபெற்று வருகிறது.

## பரீக்ஷை.

இவ்வாண்டில் பள்ளத்தூர் A. C. ஹைஸ்கூல் உதவித்தலைமை ஆசிரியர் திரு வி. வெங்கட்டராம அய்யர் B.A.L.T., அவர்களாலும் மேற்படி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. K. மாணிக்கம் பிள்ளை அவர்களாலும் (21—3—35)உ முதல் ஒருவாரம் வரை பரீட்சை நடாத்தப் பெற்றது.

குறிப்பு:—இவ்வித்தியாசாலையில் தனவைசியர்கள் அல்லாத மாணவ மாணவிகள் சம்பளமில்லாத இலவசமாக கல்வி கற்று வருகிறார்கள்.

## விழாக்கள்.

வருடப்பிறப்பு விழா, விநாயகர் சதுர்த்தி விழா, கலைமகள் விழா, விஜயதசமி விழா தைப்பொங்கல் விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

குறிப்பு:— "விநாயகர் சதுர்த்தி விழா" திரு. வீர. சோலையப்ப செட்டியார், திரு. அ. இராமசாமி செட்டியார் திரு. லெ. இராமனுதன் செட்டியார், "விஜயதசமி விழா" திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியால் நடைபெற்றன.

## ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ டிராமாடிக் சொசைட்டி.

மேற்படியார் வித்தியாசாலையின் நிதிக்காக பவஆண்டு கார்த்திகைத்திங்கள் கூம் நாள் இரவு 9-30 மணிக்கு காரைக்குடி ஷண்முகவிலாஸ் எலக்டிரிக் தியேட்டரில் காரைக்குடி நகர சபைத்தலைவர் திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள்

தலைமையில் "வசிகர சுந்தரி" நாடகத்தை நடாத்திக் காண்பித்தார்கள். அவ்வமயம் திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துரை ஒன்று வழங்கப்பெற்று நாடகமும் சிறப்பாக வந்தன வாழ்த்துடன் இனிது நிறைவெய்தியது.

## மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள்.

வித்தியாசாலையின் இரண்டாவதாண்டு நிறைவு விழாவில் மாணவ மாணவிகளுக்கு வகுப்புத் தேர்ச்சிப் பரிசுகள், நீண்டநாள் வந்தவர்களுக்குப் பரிசுகள் சுத்தமாக வந்தவர்களுக்குப் பரிசுகள் பெண்களுக்கு கைத்தொழில் பரிசுகள் ஆகியவைகள் திரு. எ. பெரி. வீர. வீரப்ப செட்டியாரவர்களின் பொருளுதவியால் அளிக்கப் பெற்றன.

## போஷகர்கள்.

திருவாளர் பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் ரூ 240ம், இரண்டாவதாண்டு விழாவில் நடைபெற்ற "வசிகர சுந்தரி" டிராமாவுக்கு ரூ 130ம் ஆக ரூ ... ... 370.

" எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் ரூ 120ம் இரண்டாவதாண்டு விழாவில் நடைபெற்ற "வசிகர சுந்தரி" டிராமாவுக்கு ரூ130ம் ஆக ரூ 250.

" பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் ரூ 120ம் இரண்டாவதாண்டு விழாவில் நடைபெற்ற "வசிகர சுந்தரி" டிராமாவுக்கு ரூ130ம் ஆக ரூ ... ... ... 250.

" அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார் ... 120.

" எ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார் ... 60.

ஆக ருபாய் 1050 உதவியுள்ளார்கள்.

## வெள்ளிக் கப்புகள்.

5—5—34ல் நடைபெற்ற நமது சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழாவன்று, வித்தியாசாலையின் மாணவமாணவிகளின் திறமையைப் பாராட்டி முறையூர் நகரத்தார் அவர்கள் வெள்ளிக் கப்பு ஒன்று பரிசாகத் தந்துள்ளார்கள்.

அன்றிரவு நடைபெற்ற "வசீகர சுந்தரி" டிராமாவில் நடித்த நமது வித்தியாசாலை மாணவர்களின் திறமையைப் பாராட்டி கண்டனூர் திரு. சி. ராம. சொ. சுப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வெள்ளிக்கப் ஒன்று பரிசாக தந்துள்ளார்கள்.

கீழச்சிவற்பட்டி அழகாபுரியில் 13—5—34ல் நடைபெற்ற "தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி முதலாவது மகாநாட்டு" கமிட்டியாரின் அழைப்பிற்கிணங்கி நமது வித்தியாசாலை மாணவ மாணவிகள் உடற்பயிற்சி முதலியன செய்ததைப் பாராட்டி மகாநாட்டுக் கமிட்டியார் பரிசாக வெள்ளிக்கப் ஒன்றும், மேற்படி மகாநாட்டு நிர்வாக சபையார் தீர்மானித்தபடி சிறப்புப் பரிசாக வெள்ளிக்கப் ஒன்றும் நற்சாட்சிப் பத்திரம் ஒன்றும் பதக்கம் இரண்டும் தந்துள்ளார்கள்.

காரைக்குடி ஷண்முகவிலாஸ் தியேட்டரில் 21—11—34ல் நமது வித்யாசாலை மாணவ டிராமாடிக் சொசைட்டியாரால் நடாத்தப்பெற்ற "வசீகர சுந்தரி" டிராமாவில் தலைமை தாங்கிய காரைக்குடி நகரசபைத் தலைவர் உயர்திருவாளர். மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் மாணவர்களின் திறமையைப் பாராட்டிப் பேசியதுடன் பெரிய வெள்ளிக்கப் ஒன்றும் பரிசாக நல்கியுள்ளார்கள்.

## சாமான்கள் படங்கள் நன்கோடை தந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| S. கிருஷ்ண அய்யங்கார் | செம்பு ... ... | 1 |

பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் டேபிள் பெல் 2

அ. சு. பழ. சு. சோம. இராமசாமி செட்டியார் பர்மா தேச படம் ... ... ... 1

லெ. இராமநாதன் செட்டியார் பெரிய காந்திப் படம் 1

" " இதர சிறிய படங்கள் ... 2

மதுரை புத்தக வியாபாரி பி. நா. சிதம்பர முதலியார் ட்ராவலிங் ஏஜண்டு திரு. P. S. தங்கசாமி பெர்னன்டோ அவர்கள் பாடப் புத்தகங்கள் ... 13

## மூன்றுவது ஆண்டுவிழாவில் பரிசு பெறுபவர்கள்

### — வகுப்புப் பரிசுகள். —

| | | |
|---|---|---|
| ஐந்தாவது வகுப்பு | முதற்பரிசு | ராம. சோமசுந்தரம் |
| " | 2வது பரிசு | ராம வீரப்பன் |
| நான்காவது வகுப்பு | முதற்பரிசு | க.தி. ராம. வீரப்பன் |
| " | 2வது பரிசு | வி. உண்ணுமலை |
| மூன்றுவது வகுப்பு | முதற்பரிசு | பழ. அழகர்சாமி |
| " | 2வது பரிசு | பழ. பெரியணன் |
| இரண்டாவது வகுப்பு | முதற்பரிசு | நா. வீர. உமையாள் |
| " | 2வது பரிசு | வீர. உமையாள் |
| முதலாவது வகுப்பு | முதற்பரிசு | ராம. முத்தையா<br>சொ. உமையாள் |
| " | 2வது பரிசு | ராம. அருணசலம் |

### நீண்டநாள் வந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| 5-வது வகுப்பு | முதற்பரிசு | ராம. வீரப்பன் |
| " | 2வது பரிசு | லெ. இராமசாமி |
| 4-வது வகுப்பு | முதற்பரிசு | பழ. அண்ணமலை |
| " | 2வது பரிசு | வி. உண்ணுமலை |

| | | |
|---|---|---|
| 3-வது வகுப்பு | முதற்பரிசு | வீர. வீரப்பன் |
| ,, | 2வதுபரிசு | மெ. விசாலாட்சி |
| 2-வது வகுப்பு | முதற்பரிசு | R. K. நரசிம்ஹன் |
| ,, | 2வதுபரிசு | மு. நாருயணன் |
| 1-வது வகுப்பு | முதற்பரிசு | ஆ. நைனுர் |
| ,, | 2வதுபரிசு | ஆ. லெட்சுமி |

## சுத்தமாக வந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| 5-வது வகுப்பு | முதற்பரிசு | ராம. வீரப்பன் |
| ,, | 2வது பரிசு | குப. ரெங்கநாதன் |
| 4-வது வகுப்பு | முதற்பரிசு | பழ. அண்ணமலை |
| ,, | 2வது பரிசு | வி. உண்ணுமலை |
| 3-வது வகுப்பு | முதற்பரிசு | மெ. விசாலாட்சி |
| ,, | 2வதுபரிசு | வீர. வீரப்பன் |
| 2-வது வகுப்பு | முதற்பரிசு | R. K. நரசிம்ஹன் |
| ,, | 2வதுபரிசு | வீர. உமையாள் |
| 1-வது வகுப்பு | முதற்பரிசு | ராம. அருணுசலம் |
| ,, | 2வது பரிசு | பெரி. இராமசாமி |

## பெண்கள் கைத்தொழில்பரிசு

| | | |
|---|---|---|
| 5-வது வகுப்பு | முதற்பரிசு | அரு. மீனுட்சி |
| 4-வது வகுப்பு | முதற்பரிசு | வி. உண்ணுமலை |
| ,, | 2வதுபரிசு | பழ. தெய்வானை |
| 3-வது வகுப்பு | முதற்பரிசு | வீர. ரெங்கநாயகி |
| ,, | 2வதுபரிசு | ந. சீதாலெட்சுமி<br>மெ. விசாலாட்சி |
| 2-வது வகுப்பு | முதற்பரிசு | நா. வீர. உமையாள் |
| ,, | 2வதுபரிசு | வீர. உமையாள் |
| 1-வது வகுப்பு | முதற்பரிசு | ந. காமாட்சி |

பவ-ளு பைங்குனி-மீ 31உ வரை

## ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் கணக்கு

| விபரம் | | வரவு | | | பற்று. | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | அ | ப | ரூ | அ | ப |
| ஸ்ரீ விநாயகர் வரவு | ... | 1 | 10 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு | ... | 1 | 10 | 0 | | | |
| ஆதாய வரவு | ... | 13 | 5 | 6 | | | |
| நன்கொடை வரவு | ... | 164 | 0 | 0 | | | |
| சந்தாக் கணக்கு வரவு | ... | 491 | 5 | 0 | | | |
| ஆண்டுவிழா நன்கொடை வரவு | ... | 1153 | 11 | 0 | | | |
| சாமான் கொள்முதல் பற்று | ... | | | | 182 | 10 | 9 |
| புத்தகம் கொள்முதல் பற்று | ... | | | | 7 | 12 | 0 |
| மாதக்கூட்டச் சிலவு | ... | | | | 71 | 0 | 0 |
| விசேடக்கூட்டச் சிலவு | ... | | | | 64 | 7 | 9 |
| சில்லரைச் சிலவு | ... | | | | 119 | 1 | 3 |
| ஆண்டுவிழா கணக்கு பற்று | ... | | | | 1235 | 12 | 9 |
| கைமாத்து பற்று | ... | | | | 49 | 0 | 0 |
| வாசகசாலைச் சிலவு | ... | | | | 58 | 7 | 6 |
| இருப்பு | ... | | | | 37 | 5 | 6 |
| ரூ | | 1825 | 9 | 6 | 1825 | 9 | 6 |

பவ-ளு பைங்குனி-மீ 31௳ வரை

## ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் கணக்கு

| விபரம் | வரவு ரூ | அ | ப | பற்று ரூ | அ | ப |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீ விநாயகர் வரவு .. | 0 | 6 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு ... | 0 | 6 | 0 | | | |
| ஆதாய வரவு ... | 38 | 1 | 0 | | | |
| நன்கொடைவரவு ... | 1525 | 0 | 0 | | | |
| பிள்ளைகள் சம்பள வரவு ... | 968 | 3 | 0 | | | |
| சரஸ்வதி வித்தியாசாலை டிராமாடிக் சொசைட்டி வரவு ரூபாய் 1228-14-0க்கு பிரயாணச் சிலவும் விளம்பரச்சிலவும் கொட்டகை பக்கவாத்தியம் சாப்பாடு வகையறு சில்லரைச் சிலவும் ரூ 601-8-6ம் வசூல் ஆக வேண்டிய டிக்கட் பாக்கி ரூ 95-8-0ம் ஆ. ரூ 697-0-6 நீக்கி வரவு ... ... | 531 | 13 | 6 | | | |
| கைமாத்து வரவு ... | 114 | 0 | 0 | | | |
| லெ. ஸ்ரீநிவாஸ அய்யர் பற்று ... | | | | 32 | 8 | 0 |
| பெரி. வீர. ராம. பற்று ... | | | | 400 | 0 | 0 |
| சாமான் கொள்முதல் பற்று ... | | | | 156 | 7 | 0 |
| இரண்டாவதாண்டில் நடாத்திய "வசிகர சுந்தரி" டிராமா பற்று ... ... | | | | 390 | 0 | 0 |
| சம்பளச் சிலவு ... | | | | 1727 | 9 | 0 |
| சில்லரைச் சிலவு ... | | | | 402 | 11 | 9 |
| இருப்பு .. | | | | 68 | 9 | 9 |
| கூ | 3177 | 13 | 6 | 3177 | 13 | 6 |

## நன்றிகூறல்

இச்சங்கத்தின் அபிவிருத்தியிலும், வித்தியாசாலை வளர்ச்சியிலும், நன்னோக்கம் கொண்டு ஆதரித்து வரும் அங்கத்தினர்களுக்கும், அபிமானிகளுக்கும், பெரியோர்களுக்கும், வித்தியாசாலையின் வளர்ச்சிகருதி பொருளுதவி செய்துவரும் போஷகர்களுக்கும் புத்தகங்கள், பத்திரிக்கைகள், சாமான்கள், நன்கொடைகள், உதவிய அன்பர்களுக்கும், ஆண்டு விழா, மாதக் கூட்டங்களில் தலைமை தாங்கியும் விரிவுரை நிகழ்த்திய அறிஞர்களுக்கும், சங்கம், வித்தியாசாலை இவைகளைப் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் நல்கிய பெரியார்களுக்கும், பரீக்ஷை நடாத்திய அறிஞர்களுக்கும், வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும், ஊக்கம் குன்றாது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பிவரும் பெற்றோர்களுக்கும், நமது நிகழ்ச்சிகளைத் தாமதியாது பிரசுரித்து வந்த பத்திரிகாசிரியர்களுககும், இச் சங்கத்திற்கு கட்டிடம் தந்துதவும் திரு. எ. பெரி. குடும்பத்தார் அவர்களுக்கும், வித்தியாசாலைக்கு கட்டிடம் தந்துதவும் திரு. பெரி. வீர. ராம. குடும்பத்தார் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த வந்தனத்தை அன்புடன் செலுத்துவதுடன் இன்னும் ஏனையோரும் இதனை நன்கு ஆதரித்து வரவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## வேண்டுகோள்

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்

மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கி இங்கு எவ்வகையானும்
இப்பெரும் தொழில் நாட்டுவம் வாரீர்."

தங்கள் அன்புள்ள,

சித. இராமசாமி,

காரியதரிசி.

## அபிப்பிராயம் தந்தவர்கள்

இச்சங்கத்தின் 12-வது ஆண்டு விழாவிலும் அதனைச்சார்ந்த கலாசாலையின் 2-வது ஆண்டு விழாவிலும் தலைமையிருக்கும் நற்பேறு வாய்த்ததுபற்றி அகமகிழ்கின்றேன். இச்சங்கத்தார் கலாசாலையை நடத்திவரும் முறை தமிழுலகு போற்றத்தக்கதாகும். ஊரிலுள்ள தலைவர்கள் அனைவரும் ஒருமனதுடன் பொருளையும் தந்து தங்கள் சீரிய தொண்டையும் உரிமை ஆக்கி இருக்கின்றனர். மாணவரின் கல்வித்திறனும், உரை ஆடல், சொற்பொழிவு, இசைப்பயிற்சி ஆகிய ஒவ்வொன்றும் எமது உள்ளத்தைக் கவர்ந்து களிபேருவகையை விளைத்தன. ஏதேனும் ஒரு பொருளைப் பேசுங்கால் மாணவர்கள் மெய்ப்பாடு விளங்குமாறு பொருளுணர்ச்சியுடன் பேசுவது அவையோரை அவர் வயப்படுத்தியது அனைவரும் போற்றத்தக்க சிறப்பியலாகும். மாணவிகளின் தொகை கலாசாலையில் பெரும் பகுதியாகத் திகழ்வதும் இக்கலாசாலையின் தனிச் சிறப்பாகும்.

இத்தகைய கலாசாலையும், அதில் பணியாற்றும் மாணவமாணவிகளும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் இப்பணியை உலையாத ஊக்கத்துடன் பொன்னேபோல் போற்றி வளர்க்க எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக.

(Sd) த. வே. உமாமகேசுவரன்,
தஞ்சை.
6—5—34

ஸ்ரீ சரஸ்வதி சங்கமும் கலாசாலையும் மிக நல்லமுறையில் நடத்தப் பெறுகின்றன. சரஸ்வதி கலாசாலை தமிழ் நாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும் இதுபோன்ற கலாசாலைகள் பல நம்நாட்டில் நடத்தப்பெறின் பெருநன்மை விளையுமென்பதில் ஐயமில்லை சங்கமும் கலாசாலையும் பல்லாண்டு வாழ்க.

(Sd) T. S. கந்தஸாமி முதலியார்,
சாத்தூர்.
6—5—34

### தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு,

கீழச்சிவற்பட்டி. அழகாபுரி.

**1933—34.**

## நற்சாட்சிப் பத்திரம்.

பவ-௵ சித்திரை-௴ **30-31**௳ களில் பி. அழகாபுரியில் கூடிய தனவைசிய இளைஞர் உடற் பயிற்சி மகா நாட்டில் நடைபெற்ற மாணாக்கர்- மாணாக்கிகளின் உடற் பயிற்சிகள் ஷெ இசைப் பயிற்சிகள், ஷெ. பாட்டுகள் முதலியனவற்றில் புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைப் பிள்ளைகள் சிறப்பு வெற்றி பெற்றதற்காக மகாநாட்டு நீதிபதிகளால் நன்கு மதிக்கப் பெற்று இப் பத்திரமும் வெள்ளிக் கிண்ணமும் அளிக்கப்பட்டன.

நீதிபதிகள்

(1) M. S. திருத்துவதாஸன். (Sd)
(2) R. சுப்பிரமண்ய அய்யர், B. A., L T., (Sd)
(3) S. RM. CT PL. பழனியப்ப செட்டியார் (Sd)
(4) சேவு. லெ. ராம. நாராயணஞ் செட்டியார்(Sd)

(*Sd*) சு. அ. சு. சுப்பிரமணியஞ் செட்டியார்.
காரியதரிசி,
கீழச்சிவற்பட்டி அழகாபுரி.

எதிர்பாராதவகை இச்சங்கத்தின் இவ்வாண்டுமுதலாவது திங்கட்கூட்டத்திற்குத் தலைமைவகிக்க நேர்ந்த இச்செவ்வியில், வித்தியாசாலை மாணவர்களும் மாணவிகளும் பாடிய பாடல்களையும் நிகழ்த்திய கட்டுரைகளையுங்கேட்டு மிகவும் மகிழ்வடைந்தேன். இச்சங்கம் எல்லாவகையிலும் இயற்றிவருகின்ற நற்கருமங்களைக்

கண்டு நம் நாட்டின் நன்மையிற் கருத்துடையவரனைவரும் பெரிதும் உவப்பர். மாணவ மாணவிகள் பேசும் முறையிலிருந்தே அவர் தம் ஆசிரியர்தம் திறமையும் ஊக்கமும் மிகச் சிறந்ததாயிருக்கும் தன்மை நன்கு தெரிகின்றது.

27-5-1934 (Sd) T. N. சேஷாசலம்.

இச்சங்கத்தின் 13-வது ஆண்டு 5-வது மாதக்கூட்டத்தின் போது தலைமை வகிக்கும்பேறு கிடைத்தது மகிழ்ச்சிக்குறியன வாகும் சங்கத்தாரால் நடாத்திவரும் சரஸ்வதி வித்தியாசாலை மாண வ மாணவிகளை நேரில் பார்த்ததில் போதனைமுறையையும் அவர்கள் நல்லுணர்ச்சியும் பார்ப்பவர் மனதைப்பரவசமடையச் செய்யுமென் பதில் சிறிதுமையமில்லை. ஆசிரியர்களின் மகத்தான நன்முயற்சி மிகமிகப் பாராட்டற்பாலது. சங்கமும் வித்தியாசாலையும் அதன் நோக்கமும் பூர்ணவெற்றியடைந்து நற்றொண்டாற்ற எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

(Sd) சாமி. பாரதநேசன்,

பவ–ஆவணி–உஉ "தேச ஊழியன்"

இச்சங்கத்திற்கு விஜயம் செய்து, காந்தியடிகளின் ஜெயந்தி விழாவில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது எனது பாக்கிய மாகும். இச்சரஸ்வதி சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் பள்ளிக் கூடத்தின் சிறுவர் சிறுமிகள் ஷெ விழாவில் நடித்துக்காண்பித்த நடிப்புகளையும் பேசிய பேச்சுக்களையும் கண்டு மிகவும் மகிழ்ச்சி யுற்றேன். இவைகள் மிகுந்த உணர்வோடும், ஊக்கத்தோடும், பொருத்தமாகவும் சிறப்புற்று விளங்கின. இவைகளிலிருந்து, குழந்தைகளுக்குப் போதித்தவர்களின் திறமையும் உற்சாகமும் நன்கு விளங்குகின்றன. இச்சங்கத்தின் மெம்பர்களும் இளைஞர் களாயிருப்பதால், அவர்களுடைய முயற்சியினாலும்

அபிமானத்தினுலும் இது செழிப்புற்று விளங்கி இந்நகருக்கே முக்கிய அறிவாளிகளும் கனதனவான்களும் போற்றக்கூடிய ஸ்தாபனமாக இருந்துவருமென்று நம்புகிறேன். இதன் ஸ்தாபகரின் முயற்சியும் நோக்கமும் கைகூடுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

(Sd) அ. சேஷாத்ரிசர்மா,

2—10—34 ஆசிரியர், "செட்டி நாடு"

## மொழிபெயர்ப்பு.

20—11—34 இன்று காலையில் பார்வையிட்டேன்

| வகுப்பு:- | V | IV | III | II | I | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம்:- | 7/1 | 8/6 | 10/11 | 4/7 | 11/9 | 40/34 |
| ஆஜர்:- | a | 6/6 | 9/8 | 3/7 | 11/7 | 29/28 |

நம் பகுதியில் தற்காலத்திற்கேற்ப உயரியமுறையில் கல்வி கற்பிக்கும் வித்தியாசாலைகளில் இதுவும் ஒன்று என்று குறிக்க அகமகிழ்வுறுகின்றேன். பின்னலும், மற்ற கைத்தொழில்களும் நன்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவிகள் செய்துள்ள வேலைகள் சண்டு மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கதாகும். இயந்திரத் தையலும் மாணவிகளுக்குக் கற்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. அதுவும் பயிற்றுவிக்கப்பட்டால் அது பெண்களுக்கு நல்லதோர் வருவாயை நல்குவதாகும். கலாசாலையின் சுவர்களெல்லாம் மாணவிகளால் பின்னப்பட்ட படங்களாலும், அழகாக வரையப்பட்ட சித்திரங்களாலும் சோபித்து விளங்குகின்றன. இசைப் பயிற்சியிலும், விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

உரையாடல்களும் நாடகப்பயிற்சியும் மாணவ மாணவிகளுக்கு கற்பிக்கப்பட்டு வருவது போற்றத்தக்கதாகும். இந்தப் பள்ளிக் கூடத்தின் மற்ளெருரு சிறந்த அம்ஸம் என்னவென்ருல் மாணவ மாணவிகளுக்கு உடற்பயிற்சி விசேஷ கவனத்துடன் போதிக்கப் படுவதாகும்

கால அட்டவணையும், பாடத்திட்டங்களும் நன்குவரையப் பெற்று அனுசரிக்கப்பட்டுவருகின்றன.

தற்சமயம் இக்கலாசாலை அரசாங்க ஆதரவுபெறமுடியாம லிருப்பதுபற்றி மிகவும் வருந்துகிறேன். அரசாங்கத்தாரிடமிருந்து சாம்பியன் திட்டத்தை (Champion Scheme) ப்பற்றிய முடி வான உத்தரவுகள் கிடைத்தவுடன் இக்கலாசாலையை அங்கீகரிப் பதற்கான சிரத்தை எடுத்துக்கொள்ளப்படும்.

எந்த விதத்திலும், இத்தாலுகாவில் நன்ருக நடைபெற்று வருகின்ற பள்ளிக்கூடங்களில் இது ஒன்று என்று குறிப்பிட மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

சரஸ்வதி சங்கத்தின் ஆதரவில் இந்தப் பள்ளிக்கூடம் நடை பெற்றுவருகிறது. நாளடைவில் இக்கலாசாலை மிகவும் உன்னத நிலையை எய்த, இறைவன் திருவருள் சுரக்குமாறு பிரார்த்திக் கிறேன்.

(Sd) M. கமலத்தியாகராஜன்,
டெபுடி இன்ஸ்பெக்டர்.

20—11—34. திருப்பத்தூர்.

புதுவயல் சரஸ்வதி சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் இப்பாடசாலையைக் கண்ணுறும் பாக்கியம் இன்று கிடைத்தது.

தனவணிகநாட்டில் தேசியமுறையில் நாட்டிற்கு நன்மை பயக்கத்தக்க கல்விபுகட்டும் ஒரு சிலபாடசாலைகளில் இது தலைசிறந்து விளங்குவது மிகவும் பாராட்டற்குரியது. வெறும் வயிற்றுப் பிழைப்பிற்காக உபாத்தியைத்தொழிலை மேற்கொள்ளுவோர் மல்கிய இக்காலத்து, குழந்தைகளின் உயிர், உடல் வளர்ச்சியில் உண்மைப்பற்றுடைய ஆற்றலும் ஒழுக்கமும் மிக்க ஆசிரியர்களைக் கொண்டு இக்கலாசாலையை நடத்த முன்வந்த சரஸ்வதிசங்கத்தார் மிகவும் போற்றற் குரியர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தையல், பின்னல், ஓவியம் சங்கீதம் ஆகியவற்றில் மாணவ மாணவிகள் மிக நன்றாகப் பயிற்றுவிக்கப் பட்டுள்ளார்கள். இவற்றோடு நூற்றல், தோட்டப்பயிர் செய்தல் போன்ற இதர கைத்தொழில்களும் போதிக்கப்படவேண்டுவது மிகவும் அவசியமாகும் நாட்டின் முன்னேற்றத்தை விரும்பும் அன்பர்கள் இப்பாடசாலைக்கு தங்கள் சிறுவர் சிறுமிகளை அனுப்புவதோடு வித்தியாசாலையின் அபிவிருத்தியைக் கருதி தேவையான பொருளுதவியும் செய்தல் அவசியம்.

இக்கலாசாலையும் இதனை நடாத்திவரும் சங்கமும் நீடூழி வாழ இறையருள் புரிவாராக.

தி. ம. நடராஜன்,

ஆசிரியன்: விஸ்வபந்து & ஜில்லாக் காங்கிரஸ் காரியதரிசி

20—2—35. காரைக்குடி.

## மொழி பெயர்ப்பு.

இன்று பிற்பகல் இந்தப் பள்ளிக்கூடத்தை பார்வையிடும் பாக்கியம் பெற்றேன். ரிஜிஸ்தரிலுள்ள 40 பையன்கள், 33

பெண்களுள் 29 பையன்களும், 23 பெண்களும் ஆஜராயிருந்தார்கள். உபாத்தியாயர்களுள் நால்வர் முழுநேரம் வேலைசெய்கிறவர்களும், ஒருவர் தேவார ஆசிரியருமாவர். உபாத்தியாயர்களில் ஒருவர் போதனுமுறை பயின்ற உபாத்தியாயினி. இந்தப் பள்ளிக்கூடம் சரஸ்வதிசங்கம் ஆதரவில் நடைபெற்றுவருகின்றது. சங்க அங்கத்தினர்களின் முயற்சி மிகவும் போற்றற்குரியது சங்கச் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமானது மிகச் சிறந்தொளிரும் என்பதில் ஐயமில்லை. இங்கே கொஞ்சநேரம் தங்கியிருந்ததில் இக்கல்லூரி அதன் முன்னேற்றத்திற் குழைப்பவர்களின் முழுநோக்கத்தை நன்கு நிறைவேற்றுமென்று யான் உறுதி கூறுகிறேன். பெண்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிற கைத்தொழில்களில் அனேக மாதிரிகள் காண்பிக்கப்பட்டன. மாணவிகள்செய்துள்ள கை வேலைகள் மிகவும் போற்றத்தக்கதாகும். இக்கழகம் மென்மேலும் தழைத்தோங்கிச் சிறக்குமாறு இறைவன் அருள்புரிவாராக.

(Sd) K. நம்பி அய்யங்கார்,

14—3—35 இராமநாதபுரம் ஜில்லாக்கல்வி அதிகாரி.

## மொழி பெயர்ப்பு.

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கச் சார்பில் நடைபெற்றுவருகின்ற புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகளை சென்ற மீ 21தேதியில் பரீட்சை செய்யும்படியான பாக்கியம் பெற்றேன்.

அதுபோது, அக்கல்விக்கழகம் ஆற்றிவரும் பணியினைப் பற்றித்தெரிந்து கொள்ள எனக்குத் தருணம் வாய்த்தது. பாட

திட்டங்களும், கால அட்டவணைகளும் நன்கு வரையப்பெற்று கூடுமானவரையில் அநுசரிக்கப்பட்டும் வருகின்றன. பெண்களுக்குக்கற்பிக்கும் கைத்தொழில், பின்னல் தையல் முதலிய வேலைகளின் சிறப்பு போற்றத்தக்கதாகும். அவர்களால் செய்யப்பட்ட வேலைகள் மிகவும் நேர்த்தியாக இருக்கின்றன. இயந்திரத் தையலும் கூடிய சீக்கிரத்தில் பயிற்றுவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. அது அவர்களுக்கு மிகவும் உபயோகமானதாகும் என்று நினைக்கிறேன். இந்தச்சங்கத்தின் நோக்கம் நடுத்தரப் பள்ளிக்கூடமாக அதனை உயர்த்தவேண்டுமென்பதாகும். எனவே சீக்கிரத்தில் அது நடுத்தரப்பள்ளிக்கூடத்தின் நிலைமையை அடையுமாறும் சங்கத்தின் சிறந்த நோக்கமும் முயற்சியும் கைகூடுமாறும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

(Sd) V. வெங்கட்டராமன்,
உதவிகணித போதகாசிரியர்,
1—4—35 A. C. ஹைஸ்கூல், பள்ளத்தூர்.

ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் சரஸ்வதி வித்தியாசாலையின் முழு ஆண்டுப்பரீட்சை 21—3—35ல் நடைபெற்றது.

அடியேன் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தமிழில் பரீட்சை நடத்தினேன். மாணவர்களும், மாணவிகளும் தமிழில் தக்கவகையில் தேர்ச்சியுடையவர்களாக விளங்கினர். அவர்கள் அளித்தவிடைகள் மிகவும் விளக்கமுடையவைகளாய் தோன்றின. மாணவ மாணவிகள் இசையில் மிகவும் பயிற்சிபெற்றிருந்தனர்.

மாணவிகள் தையல், பின்னல், மணிக்கோர்வை முதலிய கைத்தொழில்களில் கைதேர்ந்து விளங்கினர். வித்தியாசாலையின் கல்விப்பயிற்சி ஆரம்பப்பாடசாலையின் முழுத்தன்மையும் பெற்றிருக்கது. இன்னும் சீர்திருத்தப் பெரியார்கள் வேண்டுகின்ற வகையில் வித்தியாசாலையானது சங்கத்தார்களால் போற்றப் பெற்றும், புலமை மிக்க ஆசிரிர்களால் கல்வி கற்பிக்கப்பெற்றும் வருவது நாட்டுக்கு பெருநன்மையளிக்கக் கூடியதாகும். வித்தியாசாலை சம்பந்தமாக சங்கத்தாரனைவரும் கொண்டுள்ள கவனம் அளவற்றதாய் விளங்கிற்று. அப்பெரியார்களின் ஊழியமும், புலமைமிக்க ஆசிரியர்களின் ஊக்கமும் வித்தியாசாலைக்கு ஆண்டவனருளால் பெருகி இன்றும், என்றும் பெண்கள் சமூகத்திற்கு வாழ்வையளிப்பதாகுக!

(Sd) கு. மாணிக்கம் பிள்ளை,
வித்துவான், A. C. ஹைஸ்கூல்,
பள்ளத்தூர்.

1—4—35

யுவ வருடம் சித்திரை மாதம் ௪ தேதி

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்க ஆதரவில் நடைபெற்றுவரும் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையை இன்று பார்வையிடும் பாக்கியம் பெற்றேன். மாணவ மாணவிகள் வகுப்புகளில் ஒழுங்காகவும் முறையாகவும் இருந்துவருகின்றனர். நமது தமிழ் உலகத்தில் தாய்ப் பாஷையை பரவச்செய்வதற்கு இயல், இசை, நாடகம் முதலியவை எங்ஙனம் கையாண்டுவருகின்றனவோ அஃதேபோல் ஷை வித்தியாசாலையிலும் நன்கு பயிற்றுவிக்கின்றனர். தவிர, கைத்தொழில் உடற்பயிற்சி, சித்திரவேலைகள் முதலியவைகளும் செம்மையாகச் செய்யப் பெற்றிருக்கின்றன. இதனால் இதை நிர்வகிக்கும் கனவான்களுக்கும், உபாத்தினி உபாத்தியாயர்களுக்கும்

மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் என்றும் கடமைப்பட்டவர்களாகிறார்கள். நமது பாரதநாட்டின் முன்னேற்றம் ஓடி மாணவ மாணவிகளின் முகக்குறியால் நன்கு அறியக்கிடக்கின்றன என்று சொல்வது மிகையாகாது. எனது சிறிய கால அளவில் என்னுடன் சம்பாஷித்த சில குழந்தைகளிடம் நல்லொழுக்கம் நன்னடை முதலியவை பொலிந்து காண்கின்றன. எனவே காலக்கிரமத்தில் இறைவனருள் பெற்று, தக்கோர்களின் ஆதரவுபெற்று, நிர்வாகிகளின் ஊக்கத்தினாலும் ஆண்டுதோறும் மென்மேலும் வளர்பிறை மதிபோல் செழித்தோங்க பிரார்த்திக்கும்.

(Sd) சு. முனிசுவாமி,  
*Manager*,  
Chettiars (Nattukkotti) Chamber of Commerce,  
Singapore S. S.

